# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டம்

---

*(2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 18.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

***2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகச் சட்டம்***

[*2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.– 59/2006*

***தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும், நிறுவகத்தின் நிருவாகத்திற்கென ஆளுநர் சபையொன்றைத் தாபிப்பதற்கும் ; தொழினுட்பக் குழுக்களையும் தொழிற்சங்கங் களுக்கான கற்கைகள் பிரிவு ஒன்றையும் தாபிப்பதற்கும் ; ஆராய்ச்சியை நடாத்துவதற்கும், அளவைகளை நிறைவேற்று வதற்கும் அத்துடன் இலங்கையில் தொழிற்கற்கைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சியை ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–*

***1.*** *இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.* *சுருக்கப் பெயர்.*

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தைத் தாபித்தல்**

***2.*** *(1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).* *தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தைத் தாபித்தல்.*

*(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறாவழியுரிமை யையும் பொது இலச்சினை ஒன்றையும் உடையதாயிருத்தலும் வேண்டும் ; அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக் கவும்படலாம்.*

நிறுவகத்தின் குறிக்கோள்கள்.

**3**. நிறுவகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவகங்களுடன் கூட்டுச்சேர்ந்து வேலையாளர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கையில் அவர்களை முனைப்பான பங்காளியாக்குவதற்காக வேலையாளர் சேமநலனை உறுதிசெய்வதற்கான வழிமுறைகளை எடுத்தல் ;

(ஆ) தொழிற்கற்கைகள் பற்றிய கருத்தரங்குகள், வேலைக் களங்கள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடாத்து தலும் அவை தொடர்பில் வெளியீடுகள், சஞ்சிகைகள், பருவகால இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதலும் ;

(இ) ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றலும், அளவைகளை நிறைவேற்றுதலும் அத்துடன் தொழிற்கற்கைகள் தொடர்பான கற்கைநெறிகளுக்கு ஏற்பாடுசெய்தலும் ;

(ஈ) நூல்நிலையங்கள் மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்தலும் பேணுதலும் ;

(உ) ஒத்த குறிக்கோள்களையுடைய தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், ஒழுங்கமைப்புகள், கழகங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருக்கமாகக் கூட்டுச்சேர்ந்து பணிபுரிதல் ;

(ஊ) பல்கலைக்கழகங்கள் மற்றும் அதுபோன்ற நிறுவனங் களின் உதவியுடன் தொழிற்கற்கைகள் பற்றிய திப்புளோமா கற்கைநெறிகள் உள்ளடங்கலாக கற்கைநெறிகளை நடாத்துதலும், அவ்வாறு தேவைப் படுமிடத்து, சான்றிதழ்கள் மற்றும் திப்புளோமாக் களையும் வழங்குதலும் ; அத்துடன்

(எ) கைத்தொழில்சார் சுமூகநிலை பேணுவதை நோக்காகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுதலும் அவைகளை ஊக்குவித்தலும் ;

நிறுவகத்தின் தத்துவங்கள்.

**4**. நிறுவகமானது அதனுடைய குறிக்கோள்களையும் பணிகளையும் புரிவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், குறிப்பாகப் பின்வருவன எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்வதற்குத் தத்துவமும் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கொள்ளுவதற்கு, வைத்திருப்பதற்கு, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது கொடுப்பதற்கு, ஈடுவைப்பதற்கு அடைமானம் வைப்பதற்கு மற்றும் விற்பனை செய்வதற்கு அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்புக்கணக்குகளை ஆரம்பித்தலும் பேணுதலும் ;

(இ) இலங்கையிலாயினும்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினும்சரி ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுவிடமிருந்து மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அல்லது அதனுடைய பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் ;

(உ) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உள்ளடங்கலாக, ஏதேனும் பணத்தையும் உடனடிச் செலவினத்திற்கு தேவைப்படுத்தப்படாததான அத்தகைய பணத்தின் ஏதேனும் பாகத்தையும் ஏதேனும் பிணையத்தில் முதலீடுசெய்தல் அல்லது இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் ஏதேனும் அத்தகைய பணத்தை முதலீடு செய்தல் அல்லது ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பிலிடுதல் ;

(ஊ) நிறுவகப் பணிகளைப் புரியும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத் தொகையை கடனாகப் பெறுதல் ;

(எ) இலங்கையிலாயினும்சரி அல்லது வெளிநாட்டிலாயினும்சரி ஆளணியினரைப் பரிமாற்றுவதற்கும் பயிற்றுவிப்பதற்கும், ஆராய்ச்சி, மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கும், அத்துடன் பொதுவில் அவற்றின் பொதுவான குறிக்கோள்களை முன்னேற்றக் கூடியதான அத்தகைய நோக்கங்களுக்காக முழுமையாக அல்லது பகுதியளவில் நிறுவகத்தின் குறிக்கோள்களைப்போன்ற குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஏ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், தொழிலுக்கு அமர்த்துதல், ஊதியமளித்தல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களை நீக்குதல் ;

(ஐ) நிறுவகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சேவைகள் மற்றும் உதவிக்கான கட்டணங்களை விதித்தல் ; அத்துடன்

(ஒ) நிறுவகத்தின் அபிப்பிராயப்படி அதனது பணிகளை நிறைவேற்ற வசதியளிப்பதற்கு அவசியமாகின்றதான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் செய்துகொள்ளல்.

நிறுவகத்தின் நிருவாகம் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டுமென்பது.

**5**. (1) நிறுவகத்தினது அலுவல்களின் நிருவாகமும், முகாமையும் கட்டுப்பாடும் நிறுவகத்தின் ஆளுநர்களின் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

(2) சபையானது நிறுவகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக, இச்சட்டத்தினால் நிறுவகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*சபையை அமைத்துரு வாக்குதல்.*

**6**. *(1)* சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் –

*(அ)* ஆறு பதவிவழியுறுப்பினர்கள், அதாவது –

(i) தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ii) தொழில் ஆணையாளர் தலைமையதிபதி ;

(iii) கைத்தொழில் அபிவிருத்தி என்னும் விடயத் திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ;

(iv) பொதுத் திறைசேரியிலிருந்து பிரதிநிதி ஒருவர்;

(v) நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ; அத்துடன்

(vi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக் கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிடமிருந்து பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்பட்ட பதின்மூன்று உறுப் பினர்கள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவர்) அதாவது –

(i) பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின்

அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் ;

(ii) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் ;

(iii) வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அமைச்சரின் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிவரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் ;

(iv) தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு உறுப்பினர்கள் ;

(v) வேலைதருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு உறுப்பினர்கள் ; அத்துடன்

(vi) தொழிற்கற்கைகள் என்ற துறையில் சிறந்து விளங்குகின்றவர்களான இரண்டு உறுப்பினர்கள்”;

(2) தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் “சபை”யின் தவிசாளராக அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், தொழில் ஆணையாளர் தலைமையதிபதி சபையின் உப தவிசாளராக இருத்தலும் வேண்டும்.

(3) தவிசாளர் மற்றும் உபதவிசாளர் ஆகியோர் மூன்று ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீள்நியமனத்திற்கு தகுதியுடையவர்களாதலும் வேண்டும்.

(4) தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவருடைய பதவிக் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், அமைச்சர் அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென உபதவிசாளரை நியமித்தல் வேண்டும்.

(5) உபதவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவருடைய பதவிக்கான கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருப்பின், அமைச்சர் அவருடைய இடத்தில் செயலாற்று வதற்கென வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம்.

(6) ஆளொருவர், அவர்

(i) விடயத்திற்கேற்றவாறு பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாணசபையின் உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ii) நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நன்மையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொண்டிருப்பவராக விருத்தல் அல்லது அனுபவிக்கின்றவராகவிருத்தல் ; அல்லது

(iii) சபையின் உறுப்பினர் ஒருவராக அவருடைய பணிகளை அவர் நிறைவேற்றுவதைப் பங்கமாகப் பாதிக்கும் சாத்தியம் உள்ள ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளைக் கொண்டிருப்பவராகவிருந்தால்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(7) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற சபையின் உறுப்பினர்கள், சபையானது சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்படும் அத்தகைய காலம்வரை தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

*சபையின் கடமைகள்.*

**7**. நிறுவகத்தின் குறிக்கோள்கள் தொடர்புபட்ட ஏதேனும் அல்லது எல்லா விடயங்கள்மீதும், அமைச்சரினால் மதியுரைக் கென சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் அத்தகைய விடயங்கள்மீதும் அமைச்சருக்கு மதியுரை வழங்குவது சபையின் கடமையாதல் வேண்டும்.

*சபைக்கு விசேட அல்லது பொது வான பணிப் புரைகள் வழங்கு வதற்கு அமைச் சருக்குள்ள தத்துவம்.*

**8**. (1) அமைச்சர், சபையின் கடமைகளைப் புரிதல், தத்துவங் களைப் பிரயோகித்தல் பற்றி எழுத்தில் விசேட அல்லது பொது வான பணிப்புரைகளை வழங்கலாம். அத்துடன் சபையானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், சபையின் கலந்தாலோசனையுடன், தொழிற் சங்கத்தின் எவரேனும் உறுப்பினருக்குக் கட்டணக்கொடுப்பன விலிருந்து விலக்களிக்கலாம்.

*பதவிக்காலம்.*

**9**. (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) அமைச்சர் அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதின், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) சபையின் எந்த நியமிக்கப்பட்ட உறுப்பினர் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று அமைச்சரால் ஆக்கப்படுகின்றதோ அவ்வுறுப்பினர் வர்த்தமானியிலான, அத்தகைய கட்டளையின் வெளியீட்டுத் தேதியன்று அவருடைய பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் எந் நேரத்திலும் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் அவருடைய பதவியில் இருந்து விலகலாம்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறப்பினால், பதவி விலகலினால், பதவியிலிருந்து அகற்றப்படுதலினால் அல்லது வேறுவகையில் பதவியை வறிதாக்குவதன் விளைவாக சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில், 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறொரு ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் இறப்பின், பதவி விலகலின், பதவியிலிருந்து அகற்றப்படுதலின் காரணத்தினால் அல்லது வேறுவகையாக ஏற்பட்ட வெற்றிடமொன்றை நிரப்பு வதற்கு வேறொரு ஆள் நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள ஆள் அவர் சபையின் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவரின் பதவிக்காலத்தின் முடிவுறா தெஞ்சியுள்ள பாகத்திற்கு அத்தகைய பதவியைவகித்தல் வேண்டும்.

(7) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகவீனம், உடற் பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரண மாக மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு தற்காலிகமாக அவரது கடமைகளைப் புரிய இயலாதவராக இருக்கின்றவிடத்து, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென வேறொரு ஆள் நியமிக்கப்படலாம்.

(8) சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு அனுமதி யின்றி வருகைதராத சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவரது பதவியை வறிதாக்கியிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்.

**10.** (1) தவிசாளர் அல்லது தவிசாளர் சமுகமளிக்காவிடின் உப தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாள ரும் உப தவிசாளரும் சமுகமளிக்காதவிடத்து, அத்தகைய கூட்டத் தில் சமுகமாயிருக்கின்ற உறுப்பினர்கள் அவர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரை அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கெனப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும். சபையின் கூட்டங்கள்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சமமாயிருக்கும் பட்சத்தில் தவிசாளர், உபதவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் அவரது வாக்கிற்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையின் கூட்டங்கள் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் பணி களைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறு அடிக்கடி நடாத்தப்படுதலும் வேண்டும்.

(4) சபையின் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) சபையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அல்லது படியை அமைச்சரின் அங்கீகாரத்துடன் ஏதேனும் உறுப்பினருக்குச் செலுத்தலாம்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டங்களை நடாத்துவது தொடர்பிலும் அத்தகைய கூட்டத்தில் அலுவல்களை மேற்கொள்வது தொடர்பிலும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(7) சபையானது அதனது தத்துவங்களைப் பிரயோகிப் பதிலும், அதனது கடமைகளைப் புரிவதிலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதிலும் அமைச்சர் காலத்துக்குக்காலம் வழங்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைக்கு அமைவாகவும் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கவும் செயலாற்றுதல் வேண்டும்.

சபையானது தத்துவங் களையும் கடமை களையும் கையளித்தல்.

**11.** (1) சபையானது, ஏதேனும் தத்துவங்களையும் கடமைகளையும் அதன் எவரேனும் உறுப்பினருக்குக் கையளிக்கலாம்.

(2) எவ்வுறுப்பினருக்கு அத்தகைய தத்துவங்களும் கடமைகளும் கையளிக்கப்பட்டுள்ளனவோ அவ்வுறுப்பினர், காலத்திற்குக்காலம் வழங்கப்படக்கூடியதான சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு அமைய அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப் பினரின் நியமனத்தில் ஏதேனும் குறை பாடு உள்ளது என்ற காரணத் திற்காக சபையின் நடவடிக்கைகள் செல்லுபடியற்ற தாகக் கருதப் படுதலாகாது.

**12.** பத்தாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் காணப்படுவது எவ்வாறிருப்பினும் செயலாற்றுவதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினரிடையே அத்தகைய ஏதேனும் வெற்றிடம் அல்லது அவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாதலாகாது.

சபையின் இலச்சினை.

**13.** சபையின் இலச்சினையானது -

(அ) சபையின் தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியதான அத்தகைய வடிவத்தில் இருத்தல் வேண்டும். அத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர ஆவணம் எதிலும் பொறிக்கப்படலாகாது. இவர்கள் இருவரும் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

## நிறுவகத்தின் பணியாட்டொகுதி

நிறுவகத்தின் பணியாட் டொகுதி.

**14.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, சபையானது, பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தலும் பதவி விலக்குதலும் மற்றும் அவர்களின்மீது ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் ;

(ஆ) பணியாட்டொகுதியின் கூலிகள் அல்லது சம்பளங்கள் அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயித்தல் ;

(இ) அத்தகைய பணியாட்டொகுதியின் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானித்தல் ; அத்துடன்

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியின் நன்மைக்கென திட்டங்களைத் தாபித்தலும் ஒழுங்குபடுத்துதலும்.

பணிப்பாளர் - தலைமை யதிபதியின் நியமனம்.

**15.** (1) சபையானது மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருக்கவேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் - தலைமையதிபதியாக ஆளொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர் சபை அவ்வாறு தீர்மானித்திருப்பின், மீள்நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

*(2) பணிப்பாளர் - தலைமையதிபதியானவர், சபையினால் அவருக்குக் கையளிக்கக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.*

*(3) சபையானது, நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய வேறு பணிப்பாளர்களை நியமிக்கலாம்.*

*தொழினுட்பக் குழுவைத் தாபித்தல்.*

***16.*** *(1) சபையானது, இச்சட்டத்தின்கீழ் பணிகளை நிறை வேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான தொழினுட்பக் குழுக்களை நியமிக்கலாம்.*

*(2) சபையினால் நியமிக்கப்பட்ட தொழினுட்பக் குழு வொன்று, சபையினால் அத்தகைய தொழினுட்பக் குழுவிற்கு வழங்கப்பட்ட ஆற்றுப்படுத்துகை நியதிகளில் விதிக்கக்கூடிய வாறான அதனுடைய பணிகளை நிறைவேற்றுதலும் கடப்பாடு களைப் பூர்த்தி செய்தலும் வேண்டும்.*

*(3) சபையானது ஒவ்வொரு தொழில்நுட்பக் குழுவின் பதவிக் காலத்தைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அது எங்கெல் லாம் அவசியமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் மீள அமைத் துருவாக்குதலும் வேண்டும்.*

*(4) சபையானது, அவ்வாறு செய்தல் அவசியமானதென அது கருதுமிடத்து, இயைபான துறையில் வேண்டிய அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள எவரேனும் ஆளை தொழில்நுட்பக் குழுவொன்றிற்கு உறுப்பினரொருவராக சேர்த்துக்கொள்ளலாம்.*

*(5) தொழில்நுட்பக் குழுவானது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது ஊழியர்கள், தொழில்தருநர்கள் மற்றும் பகிரங்கத்துறை ஒவ்வொன்றினதும் பிரதிநிதி, ஒருவர்.*

*(6) சபையானது, குழுவின் தவிசாளராக இருக்கவேண்டிய உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.*

*(7) சபையானது, அதனால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படியை அமைச்சரின் அங்கீகாரத் துடன் தொழில்நுட்பக் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினருக்குச் செலுத்தலாம்.*

தொழிற்சங்கங் களுக்கான கற்கைகள் பிரிவைத் தாபித்தல்.

**17.** (1) நான்காம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள் களைச் செயற்படுத்துதற்காக தொழிற்சங்கங்களுக்கான கற்கைப் பிரிவொன்று (இது இதனகத்துப்பின்னர் "கற்கைகள் பிரிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், அது அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் குறிப்பிடக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அதனது பணிகளை நிறைவேற்றத் தொடங்குதலும் வேண்டும்.

(2) சபையானது, கற்கைகள் பிரிவின் பிரிவுத் தலைவராகப் பணியாற்ற வேண்டிய பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) சபையானது, கற்கைகள் பிரிவின் நோக்கங்களுக்கு தேவைப் படக்கூடியவாறான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும்.

(4) கற்கைகள் பிரிவின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) தொழிறசங்க உறுப்பினர்கள், ஊழியர்கள், தொழில் தருநர்கள், தொழில்தருநர்களின் மற்றும் ஊழியர் களின் பிரதிநிதிகள் மற்றும் பகிரங்க சேவை யாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஆ) தொழிற்சட்டங்கள், தொழிற்சங்கங்கள், நிதி, வர்த்தகம், வியாபாரம், பண்டங்கள், சேவைகள் வழங்குதல் பற்றி பயிற்சி நெறி, கருத்தரங்குகள், வேலைக்களங்களை நடாத்துதல் அத்துடன் சபையின் அபிப்பிராயப்படி தொழிற்சங்க அபிவிருத்திக்கு உதவும் தொழில் முகாமைத்துவம் மற்றும் வேறு அத்தகைய கற்கை நெறிகளை நடாத்துதல்.

(5) கற்கைகள் பிரிவின் பிரிவுத்தலைவர், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போர் நிறுவகத்தின் பணிப்பாளர் - தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேட பணிப்புரை களின்கீழ் செயலாற்றுதல் வேண்டும்.

(6) சபையானது, கற்கைகள் பிரிவின் குறிக்கோள்களை அடை வதற்கு அதனது அபிப்பிராயத்தில் தேவைப்படுவதான, ஏதே னும் அத்தகைய எண்ணிக்கையினவான கற்கைகள் பிரிவுக் கிளை களைப் பிராந்தியங்களில் தாபிக்கலாம்.

விதிகள்.

**18.** (1) நிறுவகமானது எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ் எல்லா அல்லது ஏதேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நிறுவகத்தினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும்வரை பயன்கொண்டதாதல் ஆகாது.

நிறுவகத்திற்கான சேவை குறித்த சில ஒப்பந்தத்தின் நோக்கங்களுக்காக அரசாங்கத்துக்கான சேவை ஒன்றாகக் கருதப்படுதல்.

**19.** நிறுவகமானது எந்த எவரேனும் ஆள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அரசாங்கத்திற்கு சேவையாற்ற உடன்பட்டு அரசாங்கத்துடனான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளாரோ அந்த எவரேனும் ஆளை ஊழியத்திலமர்த்துமிடத்து, அவ்வாளினால் நிறுவகத்திற்கென சேவையாற்றும் ஏதேனும் காலப்பகுதி அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

**20.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பகிரங்கசேவை ஆணைக்குழுவின் தவிசாளரின் ஒருப்பாட்டுடன் வழங்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் அத்துடன் அவ்வலுவலரினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

### *நிதி*

**21.** (1) நிறுவகமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :- *நிறுவகத்தின் நிதியம்.*

(2) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்திற்கு வரவுவைக் கப்படுதல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டுக்காக பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகைகளும் ;

(ஆ) நிறுவகத்தினுடைய தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இலங்கைலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியிலாயினுஞ்சரி எத்தன்மைத்தான ஏதேனும் மூலங்களிலிருந்து கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக நிறுவகத்தினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவன நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதில், புரிவதில், நிறைவேற்றுவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுத்துகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்திற்கு செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்துகின்றதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

நிறுவகத்தின் நிதியாண்டு.

**22.** நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**23.** பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப் புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

## பொது ஒழுங்குவிதிகள்

ஒழுங்குவிதிகள்.

**24.** (1) அமைச்சரானவர் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகளானவை இச்சட்டத்தால் ஆக்கப்படவேண்டுமென தேவைப் படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அக்கருமம் தொடர்பில் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி எதுவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கம் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளி யிடப்படுதல் வேண்டும்.

**25.** இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்படும் ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் எவரேனும் ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவினங்கள், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றம் கருதின் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*எவரேனும் ஆளினால் உறப்பட்ட செலவினங்கள் நிறுவகத்தினால் செலுத்தப் படுதல்.*

**26.** நிறுவகமானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற் கிணங்கப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச்சட்டத் தின் கருத்தெல் லைக்குள் நிறுவக மானது அட்ட வணைப்படுத்தப் பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**27.** நிறுவகத்தின் எல்லா உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தண்டனைச் சட்டக்கோவையின் கருத் தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*நிறுவகத்தின் அலுவலர்கள் மற்றும் சேவை யாளர்கள் பகிரங்க சேவை யாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**28.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**29.** இச்சட்டம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி –

*பொருள் கோடல்.*

“தொழிற்கற்கை” என்பது, கற்கை, வேலைத்திட்டம், நிகழ்ச்சித் திட்டம், ஆராய்ச்சி, ஆலோசனை வழங்கல், அளவை யிடுதல், கருத்தரங்கு, வேலைக்களம், மாநாடு, பயிற்சிக் கற்கைநெறி அல்லது கைத்தொழில் உறவுகளுடன் தொடர்புபட்ட அதேபோன்ற வேலை, தேசிய அல்லது சர்வதேச தொழில் நியமங்கள், தொழில் தொடர்பான சட்டங்கள், தொழிற்சங்கங்கள், தொழில்தருநர்–ஊழியர் உறவுகள், தொழில்தருநர்–ஊழியர் பிரதிநிதி ஒழுங்கமைப்புகள் வேலையாளர் கல்வி, மனிதவள

முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, நிருவாகம், தொழில் முகாமைத்துவம், உற்பத்தித்திறன், உற்பத்தி செய்தல், வியாபாரம், சந்தைப்படுத்தல், சமூக அபிவிருத்தி மற்றும் தொழில் பொருளியல் ஆகிய விடயங்களையும் அல்லது அமைச்சரால் விதித் துரைக்கப்படவேண்டிய அதனுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விடயத்தையும் உள்ளடக்கும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்